# சங்க இலக்கியத்தில் புன்னை

# Sanga Ilakiyathil Punnai

**முனைவர் கதி.முருகேசன் (கதிர்முருகு)**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**K. T. Murugesan (Kathirmurugu)**
*Assistant Professor*
*Departmen of Tamil*
*Ganesar College of Arts and Science*
*Melaisivapuri*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியங்களில் அக புறச் சிந்தனைகள் தவிர நுட்பமான பொருள்கள் பலவும் புலவர்களால் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தாங்கள் வாழ்ந்த சூழ்நிலையில் கண்டறிந்த பலவற்றையும் இலக்கியங்களில் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறாக அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் பலவாகும். இயற்கையின் கூறுகள் அனைத்தையும் இலக்கியத்திற்குள் பொதிந்து காட்டியுள்ளனர். அவ்வாறான கூறுகளில் ஒன்று தாவரவியல். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகிய ஒவ்வொரு திணையிலும் வளரக்கூடிய தாவர இனங்களை இனம் கண்டு அவற்றை அவ்வத் திணைப் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல் குறிப்பிட்ட தாவரத்தின் அமைப்பினையும் பயன்பாட்டையும் சுற்றுச்சூழல் நோக்கில் பதிவு செய்துள்ளனர். தாவரவியல் பல்லாவற்றாலும் வளர்ச்சி பெற்றிருக்கும் இக்காலகட்டத்தில் இன்றைய ஆய்வுக்கு உதவி செய்யும் வண்ணம் சங்க இலக்கியப் புலவர்களின் தாவரவியல் குறித்த சிந்தனைகள் அமைகின்றன. நெய்தல் நிலம் சார்ந்தும் வறண்ட நிலங்களிலும் செழித்து வளரும் தன்மை உடையது புன்னை மரம். இம்மரம் நெய்தல் நிலம் சார்ந்து வாழ்க்கையில் ஒரு அங்கமாக விளங்கியதையும் மீனவர்களின் வாழ்வில் பறவைகளின் வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாக விளங்கியதையும் நெய்தல்*

## Abstract

*Apart from the internal and external thoughts in the Sangha literature, many subtle things have also been recorded by the poets in the literature. They have also used many of the things they found in their lived situations in the literature at appropriate places. Thus they used many things. All the elements of nature are embodied in the literature. One such element is botany. Kurinji Mullai Marutham Neythal Palai identified the species of plants that can grow in each department and recorded them in the respective departments. In addition to recording, they have also recorded the structure and use of specific plants from an environmental point of view. In the period when botany is developing in many ways, the thoughts of Sangha literary scholars on botany are formed to help today's study. Punnai tree thrives in wet and dry lands. Weaving hymns have recorded that this*

*திணைப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. புன்னை மரம் மக்கள் வாழ்க்கை மற்றும் பண்பாட்டு மரபோடு பொருந்தி இருந்ததைச் சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவு படுத்தியுள்ளன.*

***முக்கியச்சொற்கள்:*** *சங்க இலக்கியம், புன்னை மரம், நெய்தல் நிலம், நெய்தல் திணைப் பாடல்கள்*

*tree became an integral part of the land-dependent life and an inseparable part of the life of the fishermen and the life of the birds. Sangha literary songs have made it clear that the Punnai tree was in tune with the people's life and culture.*

***Keywords:*** *Sangam Literature, Punnai Tree, Neithal Nilam, Neithal Thinai Songs*

**Citation**

Murugesan, KT. "Sanga Ilakiyathil Punnai." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 24–31.

**முன்னுரை**

*எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனப் பாகுபடுத்தப்படும் சங்க இலக்கியங்களில் புலவர்கள் நுட்பமாக எடுத்துக்காட்டிய கூறுகளில் ஒன்று தாவரவியல். ஐந்து நிலங்களிலும் வாழ்ந்து பழகிய மக்கள் ஒவ்வொரு திணையிலும் தங்களைச் சுற்றி இருந்த மரங்கள் செடிகள் கொடிகள் குறித்து ஆழமான அறிவைக் கொண்டு விளங்கினர். பண்டைய மக்கள் மரங்களின் அமைப்பு செடி கொடிகளின் அமைப்பு இலைகளின் அமைப்பு காய்கனிகள் அவற்றின் பயன்பாடு முதலியவற்றை அறிந்திருந்தார்கள். அகம் புறம் தொடர்பான பாடல்களைப் படைக்கும் போது அப்படைப்புக்குப் பின்னணியாகத் தாவரங்களை எடுத்துக் கொண்டு பாடல்களில் பதிவு செய்துள்ளனர். அவர்கள் அவ்வாறு பயன்படுத்திய தாவரங்களில் புன்னை மரமும் ஒன்று. வறண்ட பகுதிகளிலும் நெய்தல் திணையிலும் செழித்து வளரும் இம்மரத்தின் பயன்பாட்டைப் புலவர்கள் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு மரபோடு எடுத்துக்காட்டியுள்ளனர் அவ்வகையில் இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் புன்னை மரம் குறித்து ஆராய்கிறது.*

**புன்னை மரம்**

*புன்னை மரம் சங்க இலக்கியங்களில் பரவலாக பேசப்பட்ட மரவகையாகும். வறண்ட பகுதிகளிலும் கடற்கரைப் பகுதிகளிலும் வளரும் தன்மை பெற்ற இம்மரத்தின் அறிவியல் பெயர் கலோபில்லம் இனோபில்லம் என்பதாகும். "புன்னை* (calophyllum inophyllum) *மிகவும் அழகிய தோற்றம் கொண்ட மரங்களுள் ஒன்றாகும். இதன் இலைகள் சற்றுப் பெரியவாகவும், பளபளப்பாகவும் இருக்கும். வெண்ணிறப் பூவும் மஞ்சள் நிறப் பூந்துகட் பகுதியும் கொண்டது. புன்னை மரத்தின் அறிவியற் பெயர்* calophyllum inophyllum *என்பதின் முதற்பகுதி* calophyllum *என்பதன் பொருள் அழகான இலை.* calo *என்பது கிரேக்கச் சொல்லான (காலோசு), என்பதில் இருந்து பெற்றது. அதன் பொருள் அழகானது, அருமையானது என்பது.* phyllum () *என்பது இலை. சிங்கள மொழியில் இது தொம்ப* () *எனவும், மலையாளத்தில் புன்னாகம்* () *எனவும் அழைக்கப்படுகிறது* (www.wikipedia.com *- புன்னை) இம் மரவகை "இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரையோரப் பகுதிகள், மியன்மார், மலேசியா, ஆத்திரேலியா, இலங்கை, கிழக்காபிரிக்கக் கரையை அண்டிய தீவுகள் ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. இது ஏனைய பல இனத் தாவரங்கள் வளர முடியாத, வறண்ட மணற் பாங்கான கடற்கரையோரங்களில் வளரக்கூடியது. இந்தியாவில் மும்பாய்க்கும் இரத்தினகிரிக்கும் இடைப்பட்ட பகுதியிலும், அந்தமான் தீவுகளிலும் பெருமளவில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் கடற்கரையோரப்பகுதிகளில் காணலாம். இதன் தோற்றம் காரணமாக, நகரப் பகுதிகளில் அழகுக்காக சாலையோரங்களில் நட்டு வளர்க்கப்படுகின்றது"* (www.wikipedia.com) *என்று விக்கிப்பீடியா புன்னைமரம் காணப்படும் நாடுகளையும் அது வளரும் சூழல்களையும் பதிவு செய்துள்ளது. பி. எல் சாமி, "கடற்கரை ஓரத்தில் ஒரு சில மரங்களே வளரக்கூடியவை கடற்கரைக்குச் சிறிது தள்ளிக் காணப்படும் கானலில்* (Littoral woodland) *வளரும் மரங்களில் மிகவும் எளிதாகவும் பொதுவாகவும் காணப்படுவது புன்னை மரம் என்று செடி நூலார் கருதுகின்றனர். இதையே சங்க நூல்களில் பல இடங்களில் கடல் கானலில் காணப்பட்டதாகக் கூறியிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்க செய்தியாகும். புன்னை மரத்தை நெய்தல் திணைக்குரிய மரமாக கடல் சார்ந்த இடத்தில் காணப்படுவதாகச் சங்க நூல்களில் பல இடங்களில் பாடப்பட்டிருக்கின்றது, கடற்கரையை அடுத்த சூழ்நிலையில் கூட்டமாகப் புன்னை மரம் காணப்படுவதாகச் செடி நூலாரும் குறிப்பிடுகின்றனர்"(பி. எல். சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்,*

*பக்.122, 123) என்று சங்க இலக்கியங்களையும் செடி நூலார் கருத்துகளையும் மேற்கோள் காட்டிப் புன்னை மரத்தை அறிமுகம் செய்கிறார். "புன்னை ஓர் அழகிய சிறு மரம். கடலோரப் பகுதியான நெய்தல் நிலத்தில் மிகுதியாக வளரும் இதன் அரும்புகள் வெள்ளிய முத்தை ஒத்தவை மலரின் நறுமணம் மிகுதியாக வெளிப்படும் புன்னையைப் பற்றிய செய்திகளும் அவ்வாறே மலிய வெளிப்பட்டுள்ளன. இப்பழந்தமிழ் மரத்தைத் தமிழ்நாட்டுக்குரிய மரம் போலும் என்று காம்பிள் குறிப்பிட்டுள்ளார்" (கு.சீனிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப. 94) என்று கு.சீனிவாசன் புன்னை குறித்துக் குறிப்பிடுகிறார்.*

**அமைவிடம்**

*புன்னை மரங்கள் கடற்கரை சூழல் சார்ந்த மிகுதியாகக் காணப்படுவதை அறிய முடிகிறது. "இம்ரங்களின் இலைகள் அடர்த்தியாக உள்ள காரணத்தால் நிழல் கருமை நிறத்தில் பரவி இருப்பதையும் மரங்கள் கூட்டமாக காணப்படுவதையும் குறுந்தொகை குறிப்பிடுகிறது (123) மணல் சூழ்ந்த கடற்கரை வெளியில் புன்னை மரங்கள் காணப்படும் பகுதி எக்கர் (அகம். 20) கானல் (நற். 74) பொதும்பு (அகம். 340) பொழில் (குறுந்.123) என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறது. எக்கர், கானல், பொதும்பு, பொழில் என்னும் சொற்கள் சோலையைக் குறிப்பன. கடற்கரை சார்ந்து வாழும் பரதவ மக்களின் வாழ்க்கையோடு இயைந்தனவாகப் புன்னை மரங்களைக் கூறலாம். மீனவர்கள் குடியிருப்பு புன்னைக் கிளையை முறித்து இட்ட பசுமையான காய்கள் தொங்கும் மணல் பரப்பினை உடையதாக இருந்தது (பெரும். 266) அவர்கள் சோலையில் உள்ள புன்னை மரத்தின் கிளையில் ஏறிக் கடலில் செல்லும் கப்பல்களை எண்ணுவர் (புறம்.386.15) கடற்கரை சார்ந்த பாக்கங்களில் வாழும் மீனவர்கள் இறால் மீனைக் காயவைப்பதற்காக மணல் வெளியில் இருக்கும் புன்னை மர நிழலை நாடி வருவர் (நற். 101:4) கடலில் இருந்து மீன்பிடித்து மீண்ட பின்பு தங்கள் சுற்றமுடன் புன்னைமர நிழலில் மீனவர்கள் தேறல் அருந்தி மகிழ்ந்திருப்பர் (நற்.388:7) இரவில் மீன் பிடித்து மீளும் மீனவர்கள் கடற்கரை மணலில் மீனைக் குவித்து மீன் எண்ணெய் ஊற்றிய கிளிஞ்சலில் ஏற்றிய விளக்கின் ஒளியில் புன்னை வளர்ந்த சோலையில் துயில் கொண்டனர் (மேலது.175.5) சிறு குடியில் வாழும் பரதவர்கள் மீன் பிடித்த ஈரவலைகளைப் புன்னை மர நிழலில் உலர்த்தினர் (மேலது. 4:2) என்னும் செய்திகள் மீனவர்களின் வாழ்வுடன் புன்னை எத்தகைய பங்களிப்பைச் செய்தது என்பதை விளக்குகிறது. இதனால் கடற்கரை சார்ந்து புன்னை மரங்கள் நிறைந்திருந்தது தெளிவாகும்.*

**அடிமரம், கிளைகள், கொம்புகள்**

*புன்னை மரம் கருமை நிறம் உடையது. "இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை / நீலத் தன்ன பாசிலை யகந்தொறும் / வெள்ளியன்ன விளங்கிணர் நாப்பண்/பொன்னி என்ன நறுந்தா துதிர" (நற்.249: 1-4) என்னும் நற்றிணைப் பாடலடிகள் புன்னையின் அமைப்பை அறிந்து கொள்ள உதவுகின்றன. இரும்பைப் போன்று கரிய அடிமரம் கிளைகள் கொம்புகள் நீலம் பரந்த பசிய இலை வெண்ணிறப் பூங்கொத்துகள் பொன்னிற மகரந்தம் என கடல் கரைச் சோலையை அழகு செய்யும் மரமாகப் புன்னை விளங்கியது. இலக்கியங்களில் புன்னை மரத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றும் நுட்பமான நிலையில் விவரிக்கப்பட்டுள்ளன.*

**கடற்கரைச் சோலையின் எழில்**

*கடற்கரைச் சோலையில் வெண்மை நிறமான மணல் பரப்பில் இருள் செறிந்தது போன்ற நிழலுடைய புன்னை மரங்கள் நிறைந்த சோலை (குறுந்.123:3; அகம்.290:9; 320: 10) காணப்பட்டது. அங்கு புன்னை, ஞாழல், தாழை முதலான மரங்கள் நிறைத்து விளங்கியது. ஞாழல், புன்னை, கைதை, செருந்தி முதலியன வண்டும் தும்பியும் ஒலி எழுப்ப மலர்ந்தன (கலி.127:1) பருத்த அடிமரத்தை உடைய புன்னை மரத்தில் (நற்.235:3) கழுவப்படாத முத்துகள் (மொட்டுகள்) நிரம்பிக் காணப்பட்டன (அகம்.30: 13) அம் மொட்டுகள் கழுவப்படாத முத்தைப் போன்று அரும்பின (நற். 94:6) புன்னை கடற் கரைச் சோலைக்கு அழகு சேர்த்தது. ஞாழல் மலரும் புன்னை மலரும் உதிர்ந்து பரவிய வெண்மணல் பரப்பில் (நற். 96:2) இரும்பு போன்ற கருமை நிறமான கொம்புகளை உடைய புன்னையின் பூங்கொத்துகளில் இருந்து பொன் போன்ற மணம் மிக்க தாது உதிர்ந்து (நற்.249:1; நற். 78:3) அவ்விடம் தேன் மணம் நாறும் இயல்புடையதாகவும் (நற். 76:6) பொன்னிறமான மகரந்தம் படிந்தும் காணப்பட்டது (அகம்.250:2) நெய்தல் மலர்களில் புன்னையின் பொன்னிற மகரந்தம் படிந்து பொன்னோடு மணி சேர்ந்தது போலத் தோன்றியது (ஐங். 189:1) கீழ்க் காற்று வீசியதன் காரணமாகப் புன்னையின் மகரந்தம் குருகின் முதுகு மறையுமாறும் (நற். 74:7) கடல் துறையில் மேயும் சிப்பியின் முதுகில் படியுமாறும் சிந்தியது (நற். 87:6) தாழை செருந்தி கழிமுள்ளி புன்னை ஆகியன மலர்ந்து நெய்தல் பட்டினம் காட்சிக்கு இனிமை உடையதாக விளங்கியது (சிறுபாண்.149) ஞாழல் மரத்தின் பொன்னிறப் பூக்களுடன் புன்னை மலர்களும் உதிர்ந்து கடற்கரைச் சோலை ஓவியம் போலவும் (அகம். 70: 9) ஞாழலுடன் புன்னைப் பூக்கள் உதிர்ந்து வெறியாடு களம் போலவும் காட்சியளித்தது (குறுந். 318:12) கடற்கரைச் சோலை முழுமையும் ஞாழல் தாழை புன்னை ஆகியவற்றின் மணம் கமழ்ந்தது (நற்.235: 3; 49:8) புன்னை மரத்தில் பறித்துப் பயன்கொண்டது போக எஞ்சிய மலர்கள் கிளைகள் தோறும் பசுமையான காய்களாகத் தொங்கின (நற்.278:1)*

**புறையாறு**

*புரையாறு என்னும் நகரம் புன்னையால் அழகு பெற்று விளங்கியதை அகநானூறு குறிப்பிடுகிறது. தன்னை நாடி வரும் இரவலர்கள் கலைஞர்கள் ஆகியோரைப் போற்றும் பெரியன் என்பவனுக்குரிய மலர்க் கொத்துகள் நிறைந்த புன்னை மரங்கள் செறிந்த அழகான சோலை சூழ்ந்தது புறையாறு (அகம்.100: 13)*

**குருகு**

*கடலில் உள்ள மீன்களை உண்டு வாழும் பறவையான குருகு புன்னை மரத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தது. மலை போன்று மணல் குவிந்திருக்கும் கடற்கரையில் புன்னை மரம் காணப்பட்டது. அதன் தாழ்ந்த (குறுந். 236:4) வெண்மை நிறமான பூக்கள் பூத்த வளைந்த கிளையில் பறவைகள் தங்கி இருக்கும் (அகம். 10:3) ஞாழல் மரங்கள் நிறைந்த துறையில் நெய்தல் மலர்கள் மலர்ந்த கழியைத் துலாவி வெண்மை நிறமான மலர்கள் மலர்ந்த (பதிற்.30:3) கரிய கொம்பினை உடைய புன்னையின் வளைந்த கிளையில் இருந்து குருகு ஆரவாரம் செய்யும் (நற். 167:7) துயில் கொள்ளும் (குறுந்.5:2) கருவுற்ற நாரையும் அவ்விடத்தில் வாழும் (நற்.31:10) கடலில் இறால் மீனைத் தின்ற நாரை பூக்கள் நிறைந்த புன்னை மரக்கிளையில் அமர்ந்தால் அலையின் துளிகள் படும் என அச்சம் கொண்டு பனை மடலில் தங்கும் (பொருந.205) இறால் மீன் தின்ற வெண்குருகு புன்னை மரத்தில் தனியாகத்*

*தங்கியிருக்கும் (நற். 67:5) தேரின் ஒலி கேட்டுக் கிளையில் இருந்து பறந்து செல்லும் (அகம். 190 : 7) மாலை வேளை உப்பங்கழிகளில் மலர்ந்த பூக்கள் கூம்பக் கடல் ஒலியுடன் விளங்க மீனைத் தின்ற நாரைகளின் கூட்டம் புன்னை மரத்தில் ஒன்று கூடும் (அகம். 40:4)*

**சிறு வெண் காக்கை**

*கடற்கரைச் சூழலில் மீன் உண்டு வாழும் பறவைகளுள் ஒன்றான வெண்சிறு காக்கை ஞாழல் மரத்தில் தங்கியிருக்கும் (ஐங். 169:3) அவ்விடம் வெறுத்தால் புன்னையின் கருமை நிறமான கிளையில் தங்கும்(ஐங். 169:3; 164:3).*

**பூமாலை**

*புன்னைப் பூக்களை மாலையாகக் கட்டிக் சூடிக்கொள்ளும் வழக்கம் நிலவியது. புன்னையின் பூங் கொத்துகளால் கட்டப்பட்ட மாலையை ஆண்கள் சூடிக்கொண்டதைப் புறநானூறும் (புறம்.24:7) குறிஞ்சிப்பாட்டில் தலைவியும் தோழியும் தேடித் தொகுத்த மலர்களில் புன்னையும் இருந்ததைக் குறிஞ்சிப் பாட்டும் குறிப்பிடுகின்றன.*

**வண்டு தும்பி**

*புன்னையின் மணத்திற்கும் தேனுக்கும் விருப்பம் கொண்டு வண்டுகளும் தும்பிகளும் புன்னைமரம் சார்ந்து வாழ்ந்தமையை அறிய முடிகிறது. தேனில் விருப்பம் கொண்ட வண்டுகள் (குறுந்.175 : 3) மாலை நேரத்தில் (அகம். 40:14) புன்னையின் கருமை நிறமான கொம்பில் மலர்ந்த கொத்தான மலர்களில் ஒலிக்கும் (கலி. 123:1)*

**காவல்மரம்**

*புன்னை அரசர்களின் காவல் மரமாகவும் இலங்கியுள்ளது. திதியன் என்னும் மன்னனுக்குரிய காவல் மரத்தை வெட்டத் துணித்த எவ்வி நல்ல சொற்களைப் பிறர் கூறக் கேட்காமல் திதியனின் காவல் மரத்தை வெட்ட முயன்று வெண்ணியில் திதியனுடன் போரிட்டு இறந்தான் (அகம்.126:15) குறுகைப் பறந்தலையில் நடைபெற்ற போரில் அன்னி என்பவன் திதியனின் காவல் மரமான புன்னையை வெட்டினான் என்னும் செய்திகளை அகநானூற்றால் அறியமுடிகிறது (அகம். 45:11; 145: 13)*

**உமணர்**

*புன்னையின் அடிமரம் படகுகள் கட்டி வைக்கும் இடமாக விளங்கியது. உப்பு வாணிகம் செய்யும் உமணர்கள் உப்பளத்தில் விளைத்த உப்பை வண்டியில் ஏற்றி வணிகத்துக்காகக் கொண்டு சென்றனர் (நற். 354:4-5)*

**அகப்பொருள்**

*புன்னை மற்றும் பிற மரங்கள் சூழ்ந்த கடற்கரைச் சோலை தலைவன் தலைவியரின் சந்திப்புக்கும் காரணமாக அமைந்தது. குறிகளுள் ஒன்றான பகல் குறி புன்னைச் சோலையில் நடைபெற்றமைக்கு அகநானூறு சான்று பகர்கிறது. குறியிடம் காட்டும் இயல்புடையவளான தோழி வெண்மை நிறமான பூக்கள் பொன்போல் மகரந்தம் உதிர்க்கும் கடற்கரைச் சோலைக்குத் தலைவனை வருமாறு கூற (அகம். 80:13) தலைவனும் தலைவியும் பகல் குறியில் புன்னைச் சோலையில் சந்தித்தனர் (மேலது. 240:14) தலைவி தழையாடை உடுத்து*

*மீன்களைக் கவர வரும் பறவைகளை விரட்டி விளையாடித் தாழை ஊஞ்சலில் மகிழ்ந்து விளையாடுதலும் உண்டு என்பதை அகநானூறு குறிப்பிடுகிறது (20:3)*

**சீற்றம் தாங்கும் திறன்**

*புன்னை மரங்கள் கடற்கரை சார்ந்த இடங்களில் நிறைந்திருக்கும் காரணத்தால் அவை கடலில் எழும் புயல் மற்றும் கடும் காற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தன. கடலில் இருந்து வீசும் காற்று கிளைகளை உடைக்கும் வலிமை பெற்றது. அதனால் புன்னை மரக் கிளைகள் காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையில் வளருமாறு தம்மைத் தகவமைத்துக் கொண்டு கடும் காற்றில் இருந்து தப்புகின்றன. கிளைகள் அடி மரங்கள் வளைந்தே காணப்படுவதை இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. "முடவு முதிர் புன்னை தடவு மாச்சினை" (அகம்.10) "படப்பை நின்ற முடத்தாள் புன்னை" (அகம்.180) முடவு, முடத்தாள் என்னும் சொற்கள் புன்னையின்வளைவைக் குறிக்கின்றன. பி.எல். சாமி, "கடற்கரையில் வீசும் ஈரக்காற்றாலும் உப்புக் காற்றாலும் ஊறு ஏற்படாதிருப்பதற்காகப் கிளைகள் மேற்கு நோக்கி வளைந்து நீண்டிருப்பதுண்டு" (பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், ப.125) என்று கூறுவது கருதத் தக்கது.*

**எண்ணெய்**

*புன்னைக்காயில் இருந்து எண்ணெய் எடுக்கும் வழக்கம் நிலவியதை அறியமுடிகிறது. இதனை, "படு காழ் நாறிய பராரைப் புன்னை / அடுமரன் மொக்குளி எரும்பு வாயவிழப் / பொன்னி என்ன தாது படு பன்மலர் / சூடு நர் தொடுத்த மிச்சில் கொடுதொறு / நெய்கனி பசுங்காய் தூக்குந் துறைவனை"(நற்.278) என்னும் சான்று விளக்கும்.*

**முடிவுரை**

*நெய்தல் நிலத் தாவரங்களில் ஒன்றாக விளங்கும் புன்னை சங்க இலக்கியங்களில் நெய்தல் திணைப்பாடல்களில் விரிவான அளவில் பேசப்பட்டிருக்கிறது. கடற்கரை சார்ந்து அதிகமாகக் காணப்படும் இம்மரவகை கடலில் இருந்து வீசும் கடுமையான காற்றை எதிர்கொள்ளும் அளவு அடிமரம் கிளைகள் ஆகியவற்றைக் கொண்டு அமைந்திருக்கிறது. இதன் பூக்கள் வெண்மை நிறமாகவும் மகரந்தம் பொன்னிறமாகவும் அமைந்திருக்கின்றன. நெய்தல் நில வாழ்வியல் சூழலில் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு மரபோடு நெருங்கிய தொடர்புடையதாக இம்மரம் விளங்கி இருக்கிறது. பறவைகள் வண்டுகள் தும்பி முதலியவற்றுக்கு வாழ்விடமாகவும் சுற்றுச்சூழலை காக்கும் தன்மை உடையதாகவும் புன்னை விளங்கி இருக்கிறது. கடற்கரை சார்ந்து வாழக்கூடிய மீனவர்களின் வாழ்க்கையில் புன்னை மரச் சோலைகள் பெரும்பங்காற்றி இருப்பதைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.*

**துணை நூல் பட்டியல்**


1. *ஆலிஸ் அ, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச்., 2004*
2. *கதிர் முருகு, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம்,2009*
3. *கந்தையா நசி, பத்துப்பாட்டு பதிற்றுப்பத்து, சென்னை: அமிர்தம் பதிப்பகம் 2000*
4. *நச்சினார்க்கினியர், கலித்தொகை, சென்னை: கழகம், 1962*
5. *குறுந்தொகை, மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச், 2004*

6. சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சென்னை: கழக வெளியீடு, 1967
7. சீனிவாசன் கு, சங்க இலக்கியத் தாவரங்கள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1987
8. செயபால் இரா, அகநானூறு மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச், 2004
9. சோமசுந்தரனார் பெருமழைப் புலவர், பத்துப்பாட்டு, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2008
10. சோமசுந்தரனார் பெருமழைப் புலவர், ஐங்குறுநூறு, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2009
11. பாலசுப்பிரமணியன் கு.வெ, நற்றிணை, மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச், 2004
12. பாலசுப்பிரமணியன் கு வெ, புறநானூறு மூலமும் உரையும், சென்னை: என். சி. பி. எச். 2004,
13. புறநானூறு மூலமும் உரையும், சென்னை: என்.சி.பி.எச் , 2004
14. விசுவநாதன், அ (ப.ஆ) கலித்தொகை, சென்னை: என்.சி.பி.எச், 2004

**இணையம்**

1. www.wikipedia.com - புன்னை

## References

1. Alis, Padhitruppatthu Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
2. Jayapal Ira, Agananooru Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
3. Kathirmurugu, Patthupattu Moolamum Uraiyum, Chennai: Saradha Publishers, 2009
4. Kandhaiyah NC, Patthu Paattu, pathitruppatthu, Chennai: Amirtam Publishers, 2000
5. Nachinarkiniyar, Kalithogai, Chennai: Kazhagam, 1962
6. Kurunthogai Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
7. Samy B.L, Sanga Ilakkiyathil Sedi Kodi Vilakkam, Chennai: Kazhagam, 1967
8. Srinivasan K, Sanga Ilakkiyata Thavarangal, Thanjavur: Tamil University, 1987
9. Somasundaranar, Patthupattu, Chennai: Kazhagam, 2008
10. Somasundaranar, Aingurunooru, Chennai: Kazhagam, 2009
11. Balasubramanian, Ku ve, Natrinai Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
12. Balasubramanian, Ku ve, Purananooru Moolamum Uraiyum, Chennai: NCBH, 2004
13. Viswanathan, A, Kalithogai, Chaanai: NCBH, 2004

**Website**

1. www.wikipedia.com - Punnai